முதலைப்பாளையம் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத்தில் பணம் கையாடல்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) அண்மை ஆண்டுகளில் முதலைப்பாளையம் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத்தில் பணம் கையாடல் செய்யப்பட்டதா?

(இ) இது தொடர்பாக பலர் கைது செய்யப்பட்டுள்ளனரா?

(உ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) ஒருவர் மட்டுமே.

(உ) முதலைப்பாளையம் பனைவெல்லக் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் திரு. இராம நாடார் சங்கத்தின் கையிருப்புத் தொகையினை கையாடல் செய்து விட்டார். ஈரோடு சப்-டிவிசனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் செக்ஷன் 409 ஐ.பி.சி.-ன்படி ஒரு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அவருக்கு மூன்று மாத சாதாரண சிறைவாச தண்டனை அளிக்கப்பட்டு தீர்ப்பாகியுள்ளது.

Soil Salinity Research

†*48 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any Soil Salinity Research has been conducted in the State; and

(b) if so, the details thereof?

மண் உவர் தன்மை ஆராய்ச்சி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் மண் உவர் தன்மை ஆராய்ச்சி ஏதேனும் நடத்தப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

† 22—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

1973 நவம்பர் 23]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) தலைவரவர்களே, விவர அறிக்கை @ இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

நவம்பர் 21-ந் தேதி சட்டக் கல்லூரி மாணவர்களைக் கைது செய்தது குறித்து

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள்—

"21-ம் தேதி முற்பகல் சட்டக் கல்லூரி மாணவர்களை நூற்றுக் கணக்கில் காரணமில்லாமலும், முன்னெச்சரிக்கை இல்லாமலும் கைது செய்ததைப் பற்றி பொது மக்கள் குழப்பம் அடைந்திருப்பதால் அதைப் பற்றி விவாதிப்பது குறித்து"

இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழ் வருகிறது என்பதை உறுப்பினர் விளக்கும்படி கோருகிறேன்.

***திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** மாண்புமிகு தலைவரவர்களே, 21—11—1973 ஆம் தேதி முற்பகல் சட்டக் கல்லூரி மாணவர்கள் ஊர்வலமாக வரும்போது, அவர்களைப் போலீசார் மறித்து, எந்த விதமான காரணமும் காட்டாமல், அவர்கள் தங்கள் கோரிக்கைகளைச் சர்க்காருக்குக் கொடுப்பதைத் தடை செய்யும் முறையிலே, நூற்றுக் கணக்கான மாணவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். அதேமாதிரியாக பிற்பகலும் சில கல்லூரி மாணவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். அதன் காரணமாக தொடர்ந்து 22-ம் தேதியும், இன்றைய தினமும் (23-ம் தேதி) சென்னை நகரத்தில் மட்டுமல்லாமல், தமிழ் நாடு பூராவும் உள்ள மாணவர்கள் ஆங்காங்கே தங்கள் கோரிக்கைகளை சர்க்காரிடம் கொண்டுபோகும் அளவிலே ஊர்வலம் நடத்தியதற்காக கைது செய்யப்பட்டு, விடப்பட்டிருக்கிறார்கள். ஜனநாயகத்திலே யாராக இருந்தாலும் சரி, தங்களுடைய கோரிக்கைகளைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு உரிமை இருக்கிறது. சாத்வீக முறையிலே,

---

@ 330-331-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.